

# திறவுகோல்

மார்கழி 2048 / மாத இதழ்

## சாகர் மாலா

## ஹார்வர்டு தமிழ் இருக்கை

### குலோத்துங்க சோழ விண்ணகரம் என்கிற மன்னார்குடி தொகுப்பு - 2

### கலியுகத் தலைவனைத் தேடி

## கையெறு நிலையில் கடலோடிகள்

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் குழு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# ஆற்று மணல் தட்டுப்பாடு
## (ஓர் தீர்வை நோக்கி)



செ.சதிஷ்குமார்

மணல் தட்டுபாட்டினால் தற்போது கட்டுமான துறையில் பெருமளவு பாதிப்பு என்று சொல்லப்படுகிறது, மேலும் மணலின் விலை உயர்ந்தும் சில இடங்களில் கிடைக்கவும் இல்லை. இதனால் இனி தமிழகத்தில் கட்டுமானமே நடக்காதா? அப்படியென்றால், ஆறுகளை கொண்டிராத நாடுகள் எப்படி விண்ணை முட்டும் கட்டிடங்களை கட்டுகிறார்கள்? இது தமிழகத்தில் சாத்தியம் இல்லையா?

விண்வெளி துறையில், ஐ.எஸ்.ஆர்.ஓ உலக நாடுகளின் விண்கலன்களை குறைந்த செலவில் அனுப்புகிறது, அதிக வரவேற்பும் பெறுகிறது ஏன்? இதில் தொழில்நுட்ப சிக்கல் மற்றும் திட்டமிடலில் சிக்கல் ஏற்பட்டால் தோல்வியில் முடியும். இதையே அதிகப் பொருட்செலவில் செய்தாலும் மிகச்சிறப்பாக செய்து முடிக்க முடிகிறது. குறிப்பாக இந்த திட்டங்களில் முக்கிய இடங்களில் இருப்பது தமிழர்களே.

இதே அளவு நிபுணத்துவம் கொண்டவர்களும் கட்டுமான துறையில் இருக்கிறார்கள் இதை ஏன் சொல்கிறேன் என்றால், என்னை பொறுத்தவரை மணல் தட்டுப்பாட்டை போக்குவது என்பது விண்கலத்தை செலுத்துவதை விட எளியது தான், ஆனால் திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதலில் அரசும், மக்களும் விண்வெளித் துறைக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை இதற்கும் கொடுக்க வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் இருக்கிறோம்.

ஆறுகள் இல்லாத அரபு நாடுகளில் மணலின் தேவையை எப்படி சரி செய்கிறார்கள். துபாய் போன்ற ஐக்கிய அரபு நாடுகளில் இறக்குமதி செய்து கொள்கிறார்கள். அதேபோல், இங்கு இட நெருக்கடியும் இருப்பதால் பல்லடுக்கு கட்டமைப்பு (multiple floors) க்கு அவர்கள் செல்ல வேண்டிருக்கிறது, அப்படி செல்கையில் உறுப்புகளின் (members) அளவு அதிகமாக தேவைப்படுகிறது.

இதனால் கட்டுமான பொருட்களின் தேவையும் அதிகமாகும். சாதாரண நடைமுறையில் உள்ள கட்டுமான முறையில் மணலின் பங்கு ஒரு அலகு (Unit) காங்கீரிட்க்கு 20 முதல் 30 சதமும், செங்கல் கட்டுவேலை, பூச்சு மற்றும் தளம் அமைப்பதற்கு சராசரியாக 75 சதவீதம் தேவைப்படுகிறது. இதை இவர்கள் இறக்குமதி செய்து பெற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு பொருளாதார தடையுமில்லை. ஆனால் இன்றைய நாளில் தமிழகத்தில் சூழ்நிலையே வேறு.

ஓமன் நாட்டில் கட்டுமான வேலைகள் மற்றும் மணலின் பயன்பாடு சற்று வித்தியாசமானது. முதலில் ஓமன் நாட்டில் பல்லடுக்கு கட்டிடங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அப்படி சென்றாலும் ஆறு தளங்களுக்கு மேல் கட்டுமானம் செல்வதில்லை. இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. மற்ற வளைகுடா நாடுகள் போல் இல்லாமல் பரந்து விரிந்த நிலப்பரப்புகளை கொண்டிருப்பதாலும் அதற்கேற்றாற் போல் கட்டமைப்பை (சாலைகள், வடிகால் அமைப்புகள், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மின்வசதி) அனைத்து பகுதிக்கும் செல்வது போல் ஏற்படுத்தியதால் அவர்களுக்கு பல்லடுக்கு கட்டுமானம் தேவைப்படுவதில்லை.

அதே போல்  குறிப்பாக மணல் இறக்குமதி செய்வதில்லை. வாதி கற்கள் (vadi boulders) என்று சொல்லக்கூடிய மலைகளின் முகத்துவாரதில் கிடைக்கக்கூடிய கற்களை பொடியாக்கும் (crushing machine) இயந்திரம் மூலம் தேவையான அளவில் பொடியாக்கி, பலவகை சோதனைகளுக்கு (lab test) பிறகு பயன்படுத்துகிறார்கள் (சாலைகளுக்கு தேவையான ஜல்லி கற்களுக்கும் பயன்படுத்துகிறார்கள்).

இதில் எனக்கேதும் வியப்பில்லை, ஏனென்றால் நம் தமிழகத்தில் இவற்றையெல்லாம் பலநூறு  ஆண்டுகளுக்கு முன்பே இதைவிட சிறப்பாக நடைமுறையில் வைத்திருந்தோம். எப்படியென்றால் அந்தந்த பகுதிகளில் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு நம் முன்னோர்கள் வீடுகள், வழிபாட்டு இடங்கள், கோட்டைகள், சாவடிகள், பாட சாலைகள், பசுமடங்கள் மற்றும் நந்தவனங்கள் போன்றவை அமைத்து தேவையைச் சிறப்பாக பூர்த்தி செய்துக் கொண்டார்கள்.

இந்த மாதிரியான கட்டிடங்களைப் பார்த்தோமானால், அந்தந்தப் பகுதிகளில் எளிதாக கிடைக்ககூடிய பொருட்கள் மற்றும் திரும்ப பயன்படுத்த கூடிய பொருட்களை கொண்டே முடித்திருப்பர். வீடுகளில் நம் முன்னோர்கள் பலவித கட்டுமானக்களை  கையாண்டிருப்பார்கள். எடுத்துக்காட்டாக பனமட்டை, வைக்கோல், கோரை மற்றும் தென்னை ஓலையை கொண்டு அமைக்கும் எளிய வகை வீடுகள், நாட்டு ஓடுகள் வேய்ந்த வீடுகளில் உத்திரங்களாக பனை மரங்கள், மூங்கில், நாட்டு வகை மரங்கள், தேக்கு என அவர்களின் வசதிகேற்ப பயன்படுத்திருப்பர்.

ஒட்டு வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சாதாரண மண் வகைகள் மற்றும் அதிகபட்சமாக சுண்ணாம்பு, கடுக்காய், முட்டை, சுட்ட கற்களை சுவர்களுக்கும், கடைகால் போன்ற பொருட்களை மட்டுமே பயன்படுத்தியிருப்பர். இன்றளவும் பராமரிக்கப்படும்  இவ்வகை கட்டிடங்கள் உறுதியுடன் நிற்கின்றன. கட்டிட வடிவைமைப்பின் கொள்கையும் (architecture principles) இதை தான் சொல்கிறது

‘‘அந்தந்த பகுதிகளில் எளிதாக கிடைக்ககூடிய பொருட்கள் மற்றும் அமைவிடத்தின் சீதோசண நிலைக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும்’’.

ஆனால் வெகுசில காலங்களாக, ஏறத்தாழ 40 வருடங்களாக தமிழகம் முழுவதிலும் ஒரே மாதிரியான கட்டுமானங்களை மட்டுமே அனைவரும் கட்டி வருகிறோம். இதில் பெரும் பங்கு வகிப்பது கம்பி, மணல், ஜல்லி மற்றும் சிமென்ட் மட்டுமே. அதாவது அரசுக்கட்டிடங்கள், சிமென்ட் சாலைகள், வடிகால்கள், அணைகள் பேருந்து நிலையங்கள், ரயில் மற்றும் விமான நிலையங்கள் என அனைத்து கட்டமைப்புகளும் அப்படி தான் செய்யபடுகின்றன. இவற்றிற்கு குறிப்பாக எவ்வளவு மணல் செலவிடபட்டிருக்கும். எத்தனை ஆறுகள் கபளிகரம் செய்யப்பட்டு இருக்கிறது?

இங்கு வேறு மாற்று கருத்தும் வரலாம். அப்போது வளர்ந்த மேலை நாடுகளான அமெரிக்கா, ஆஸ்திரேலியாவில் விண்ணை முட்டும் கட்டிடங்கள் நிற்கின்றன. தேவையான கட்டமைப்பு அவர்களால் மட்டும் எப்படி செய்யமுடிகிறது? நாமும் அந்த மாதிரியான வளர்ச்சியை அடைய வேண்டுமே என்று கேள்வியை எழுப்பலாம். இதில் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும் அவர்கள் முப்பது வருடங்களுக்கு முன்னரே வேறு வேறு தொழில்நுட்பத்திற்கு சென்று விட்டனர்.

எடுத்துக்காட்டாக காம்போசிட் ஸ்ட்ரெக்சர் (composite structure) இரும்பு உத்திரங்கள் மற்றும் சிமென்ட் கலவை கொண்டு மிக உயர கட்டிடங்களைக் கட்டுவது. முக்கியமாக இம்முறையில் காங்கிரீட் அளவு குறைவதால் மணல் மற்றும் ஜல்லியின் தேவை அளவு குறைகிறது. மேலும் கட்டிடம் பயன்படாத வகையில் போகும் போது இதில் முக்கால்வாசிப் பொருட்களை மறுமுறை உபயோகித்துக் கொள்ளலாம்.

ஆஸ்திரேலியாவை எடுத்துக்கொண்டால் அவர்கள் ஒரு படிக்கு மேல் போய் அரசு, தனியார் மற்றும் வீடுகளை கூட அவர்கள் அவர்களுடைய பாரம்பரிய வடிவமைப்பு மாறாமல் முழுமையாக, மென்பொருள் (வடிவமைப்புக்கு) மற்றும் உற்பத்திக்கு நவீன தானியங்கி தொழில்நுட்பம் (numerical code machines) மூலமாக 85 சதவீதம் வரை இரும்பை (hot rolled and cold rolled steel) பல உருக்களில், கனத்தில் செய்துக்கொண்டுள்ளனர். இத்தகைய முறைக்கு Pre Engineered building system என்று பெயர்.

இவ்வகை கட்டுமானங்களில் தற்போது தமிழகத்தில் தொழிற்துறைச் சார்ந்த கட்டிடங்களுக்கு மட்டுமே செய்யப்படுகிறது, அதுவும் சொற்ப எண்ணிக்கையில். இது வீடுகள் கட்டுவது வரை நீள வேண்டும் என்பது என்னுடைய ஆவலும் கூட. இந்த வகை தொழில் நுட்ப கட்டிடங்களுக்கு நம் அரசு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும், அரசு சார்ந்த கட்டிடங்கள் இம்முறைக்கு மாற வேண்டும்.

கமிசன் மற்றும் ஊழல் குறைய வாய்ப்பு உள்ளது. இவ்வகை கட்டிட அமைப்பை பற்றி வேறு பதிவில் விளக்கமாக பார்ப்போம்.

மேலே உள்ளவற்றை படிக்கும் போது சிலவற்றை விளங்கி கொள்ள முடியும். நம் முன்னோர்கள் கட்டிய கட்டுமானங்களுக்கும் இப்போது காலத்திற்கேற்ப நவீன தொழில்நுட்ப கட்டிட பாணிக்கும் இடையில் எங்கோ மூலையில் தொங்கி கொண்டு இருக்கிறோம். இந்த இடைப்பட்ட காலத்தில் இழந்த இயற்கை வளங்கள் அதிகம் என்பது மட்டும் நிதர்சனம்.

ஒரே மாதிரியான கட்டிடங்கள் (கான்கிரீட் பயன்படுத்தி) தமிழகத்தில் கட்டப்படுவதில் மது அரசியல் போல மணல் அரசியல் கூட இருக்கலாம். வேறு வகை கட்டிடத்திற்கு மாற அரசு நடவடிக்கை எடுப்பதில் நடைமுறை சிக்கல் ஒன்றும் இருப்பதாக  தெரியவில்லை. ஒரு வேலை அரசு ஆலோசனைக்கு தகுந்த நிபுணர்களை கூட நாடாமல் இருக்கலாம். இதிலிருந்து முக்கியமாக மக்களுக்கும் மாறி வரும் கடமை உள்ளது.

முதலில் மெத்தை (கான்கிரீட்) வீட்டில் வசிப்பது தான் பெருமை, சிறப்பு என்பதை கைவிடவேண்டும், தன்னால் முடிந்த வரை வங்கி கடன் கூட இல்லாமல் கையில் இருக்கும்  பணத்தைக் கொண்டு முடிக்கும் வகையில் நம் கட்டிட அமைப்பு இருக்க வேண்டும்.

சரி இந்த பிரச்சனையிலிருந்து வெளியே வர எப்படியெல்லாம் திட்டங்களை அரசும் செயல்படுத்தலாம் என்றும் இந்த மணல் பிரச்சனையை மக்கள் இனிவரும் காலங்களில் எப்படி எதிர்கொள்ளலாம் என்பதை அடுத்த பதிவில் விளக்கமாக பார்ப்போம்.

ஆக்கம்:
**செ.சதிஷ்குமார்** (மன்னார்குடி).
சலாலா, ஓமன்

# அமைதியோ அமைதி



நிரஞ்சன்
மன்னார்குடி

உலகமே அமைதியற்று இருக்கிறது. அதன் அமைதியை கெடுத்தவன் மனிதனே! மனிதனின் வளர்ச்சிக்கும், மகிழ்ச்சிக்கும் முக்கிய காரணம் ஆறாவது அறிவு என சொல்லப்படும் மனம், பதட்டம், தவிப்பு, குழப்பம், வெறித்தனம், ஆத்திரம், வெறுப்பு இவை தான் மனத்தின் சத்ருக்கள்.

அவ்வபோது எழக்கூடிய இத்தகைய உணர்வுகள் தான் தற்போது மனிதனை முழுமையாக ஆட்கொண்டிருக்கிறது. இவை தான் தற்போது மனிதனின் வாழ்க்கையாகவே மாறிவிட்டது. மனிதனால் அமைதியாய் இருக்கவே முடியவில்லை. தற்சார்பு பொருளாதாரத்தில் இருந்து மனிதன் வெளியே வர தொடங்கியதுமே அவன் அமைதி பறிபோக தொடங்கிவிட்டது. அவனது வாழ்வியல், குடும்பம், சூழல், ஆழ்மனம் அனைத்தும் சிதற தொடங்கிவிட்டது.

உலக அமைதியை பற்றி அப்துல் கலாமிடம் கேட்டபொழுது ‘‘கட்டிலில் அமைதி ஏற்பட்டால் உலகில் அமைதி ஏற்படும்’’ என்று கூறினார். ஆணும், பெண்ணும் கட்டிலில் அமைதி அடையும்போது தான் உலகமே அமைதி பெறும். காமசூத்திரத்தை உலகிற்கே கற்றுகொடுத்த தமிழனுக்கே தற்போது காமத்தில் அமைதி இல்லை. உடல் ரீதியான, மனரீதியான பிரச்சனைகள் பெருகிக்கொண்டே போகிறது. காரணம் உணவு அரசியல்.

உணவில் அரசியல் செய்வதன் முக்கிய நோக்கமே, ஆணின் ஆண்மையை பறிப்பதும், பெண்ணை மலடி ஆக்குவதும் தான். மருந்து மாத்திரைகளும் அதை தான் குறி வைக்கிறது. இனச்சேர்க்கையில் சிக்கல் ஏற்பட்டால் அனைத்து உயிரினங்களுமே அசாதாரண நிலைக்கு தள்ளப்படும். ஆண் பெண் உறவை சிக்கலுக்குள்ளாக்கி உலகின் அமைதியை கெடுத்து அதில் அரசியல் செய்யும் அயோக்கியத்தனம் தான் தற்போது நடந்துக் கொண்டிருக்கிறது.

மனிதனால் அமைதியை ஏற்கவே முடிவதில்லை. மனிதனால் தனக்கு (உடல், மனம், சிந்தை) வெளியில் அமைதியான ஒரு சூழ்நிலை இருந்தாலோ, சப்தமின்றி நிசப்தமாக இருந்தாலோ தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த அமைதி அவனை தொந்தரவு செய்கிறது.

காரணம் தனக்கு (உடல், மனம், சிந்தை) உள்ளே அமைதி இல்லை. இது மிக பெரிய உளவியல் சிக்கல். அவ்வாறு தனக்கு வெளியில் அமைதியான சூழல் தொந்தரவு செய்யும்போது உடனே புகைப்பிடிப்பார்கள் (அமைதி அதிகமாக அதிகமாக சிகரெட் துண்டுகளும் அதிகமாகிக்கொண்டே போகும்), சிலர் ஹான்ஸ், பாண் பராக் போன்ற போதை பொருள்களை வாயில் அடக்கிக் கொள்வார்கள்.

அப்படி செய்யாவிட்டால் அவர்களுக்கு மண்டை வெடிப்பது போல் இருக்கும். பெண்கள் தேநீர் குடிப்பார்கள். பெரும்பகுதி பெண்கள் தங்கள் பிள்ளைகளை போட்டு அடிப்பார்கள். சிலர் கண்ணீர் விட்டு அழக்கூட தொடங்கிவிடுவார்கள். தற்போது ஆண்களை விட பெண்களால் கைபேசி இல்லாமல் இருக்க முடிவதில்லை.

ஆண்ட்ராய்ட் கைபேசி இல்லாமல் அமைதி இல்லை பெண்களுக்கு. அமைதி இல்லாமல் காதலி காதலனையோ, காதலன் காதலியையோ நச்சரித்துக் கொண்டே இருக்கிறார்கள். தனது அலுவலகங்களில் அமைதியாய் இருக்க முடியாமல் எதாவது பிரச்சனைகளை உருவாக்கி அமைதியற்ற நிலையில் வெறித்தனமாக வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள்.

அமைதியாக இருக்க முடியாமல் சிலர் விரல்களில் நெட்டி முறிப்பார்கள், நகம் கடிப்பார்கள். பலரால் இன்று அமைதியாக தூங்க முடிவதில்லை. தூக்கம் வருவதில்லை, தூங்கினால் அமைதியான ஆழ்ந்த தூக்கம் இல்லை. அமைதியற்ற கனவுகள். தூக்க மாத்திரை போடாமல் தூங்க முடிவதில்லை என்ற அவல நிலை இங்கு உள்ளது.

ஏன் மனிதன் அமைதியற்று போனான்? அமைதியாக மகிழ்ச்சியாக விவசாயம் செய்து வாழ்ந்து வந்தான் மனிதன். ஆடிப்பாடி கொண்டாட்டமாக உழைத்து வாழ்ந்தவனை அடிமையாக உழைக்க வைத்து அவன் அமைதியை பறித்துவிட்டது அரசியல். இன்றைய அரசியல் திட்டமிட்டு அமைதியற்ற மக்களை உருவாக்குகிறது. நாம் அமைதியாய் இருந்தால் அவர்களால் அரசியல் செய்ய முடிவதில்லை. அமைதியின்மைக்கு பின்னணியாக அயோக்கிய அரசியல் இருக்கிறது.

வெள்ளையன் வருகைக்கு முன் அமைதி அமைதி!
வெள்ளையன் வருகைக்குப் பிறகும் அமைதியோ அமைதி!
உலகமயமாக்கலுக்குப் பிறகு அமைதிக்கெல்லாம் அமைதி!

**- நிரஞ்சன்**
மன்னார்குடி



அம்மாடி
நீதான் என் கண்ணாடி

நான் உடுத்தும்
புத்தாடை அழகை

உன் முகத்தின்
புன்னகை சொல்லுமடி

அம்மாடி
நீதான் என் கண்ணாடி

எல்லா புகழும்
இறைவனுக்கே....

**கவிதாயினி அ. சுமையா**
3 ஆம் வகுப்பு
நீடாமங்கலம்

அடுத்த பிறவி இருந்தால்,
தாயின் காலடியில்
செருப்பாக பிறக்க ஆசைப்படுகிறேன்.

ஏனென்றால்
என்னை சுமந்த
அவளைச் சுமந்துச்
செல்வதற்காக!!"

**மோனிகா**
இரண்டாம் ஆண்டு இயற்பியல்
இராசகோபாலசாமி கலை அறிவியல் கல்லூரி
மன்னார்குடி



G. ராகவி
இளங்கலை ஆங்கிலம் முதலாம் ஆண்டு
மன்னை இராசகோபாலசுவாமி கலைக்கல்லூரி



ச. அருண்குமார்
நான்காம் வகுப்பு
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி
புள்ளவராயன் குடிக்காடு

# நீண்ட நாள் ஆசை...

தாயின் கருவறையில் இருந்து
என்னை விட்டு ஒரு வருடம்
முந்தி வந்தாய்...

வளர்ந்து உன் விரல் பிடித்து நடக்கும் போது
என்னை விட்டு முந்தி
பள்ளிக்குச் சென்றாய்...

உன்னுடன் சேர்ந்து பள்ளிக்குச் செல்வதை
எண்ணி மகிழும் தருவாயில்
என் கையைப் பிரித்து விட்டு
கல்லூரிக்குச் சென்றாய்...

என் கல்லூரி நினைவுகளை
உன்னுடன் பகிர்ந்துக்கொள்ள ஆசைப்படும் நேரத்தில்
நம் எதிர்காலம் கருதி
வெளிநாடு சென்றாய்...

நீ என்னை விட்டு செல்வது
எனக்கு மகிழ்ச்சி தான்...

ஆனால் மரணத்தில் மட்டும்
நான் முந்திச்செல்ல ஆசைப்படுகிறேன்.....

D. வினோதினி
இளங்கலை ஆங்கிலம் முதலாம் ஆண்டு
மன்னை இராசகோபால சுவாமி கலைக்கல்லூரி

# இருசக்கர வாகன
## பராமரிப்பு பற்றிய ஒரு பார்வை



- மன்னை ரஞ்சித்

வாசகர்களுக்கு வணக்கம்

நான் இயந்திரவியல் படித்து ஒரு தனியார் வாகன நிலையத்தில் Service advisor ஆக பணியாற்றி உள்ளேன்.

நம் அனைவரும் இருசக்கர வாகனம் வைத்துள்ளோம். அதை எப்படி பராமரிக்கலாம் என என் அனுபவத்தில் சிலவற்றை தங்களுடன் பகிர்ந்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதலில் நாம் புதிய வாகனம் வாங்கினால் அதை கட்டாயம் ஒரு வருடமாவது வாங்கிய இடத்திலயே Service செய்யுங்கள். ஏனெனில் நம் அன்றாட வேலையில் நாம் எந்த சரியான முறை சர்வீஸ் செய்தோம் என மறக்க வாய்ப்பு உண்டு. ஆனால் வாங்கிய இடத்திலேயே Service செய்தால் அவர்கள் நாம் எத்தனை முறை சர்வீஸ் செய்தோம் என File செய்திருப்பார்கள் இதன் மூலம் சரியான நேரத்தில் செய்யலாம்.

சிலர் வாகனம் ஓட்டும் போது வாகனம் அதிர்வு ஏற்படுவதாக உணருவர். அதன் ஒரு வகை காரணம் நம் டயர் காற்று அளவே. அதாவது காற்றை அடிக்கடி சோதித்து ஓட்டினால் ஓரளவு அதிர்விலிருந்து சரிசெய்யலாம்.

அனைவரும் சொல்லும் ஒரே பிரச்சனை Mileage தரவில்லை என்பதுதான் இது மூன்று காரணங்களால் தடைப்படும்.

ஒன்று, வண்டியில் உள்ள Air filter என்ற பாகம் மாற்றாமல் இருப்பது. இரண்டு, Chain சரியாக Adjustment செய்யாமல் தொடந்து ஓட்டுவது மற்றொன்று கார்பரேட்டர் என்ற பாகத்தில் தூசி அடைந்தாலும் ஏற்படும்.

இதை மூன்றையும் தொடந்து பரிசோதனை செய்து, தேவைப்பட்டால் Chain spraketயையும் Air filterயையும் மாற்றி ஓட்டலாம்.

குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை
Air filter (ஏர் பில்டர்)
Spark plug (ஸ்பார்க் பிளக்)
Oil filter (ஆயில் பில்டர்)

Oil (ஆயில்) ஆகியவற்றை மாற்றி ஓட்டுவது நல்லது.

சாதாரண வாகனம் எனில் Belt (பெல்ட்)யையும்.

கியர் வண்டி எனில் Chain sparket (செயில் பிராக்கெட்) அடிக்கடி பரிசோதனை செய்து விட்டு ஓட்டுவது நல்லது.

Disk வைத்துள்ள வாகனத்தில் எக்காரணம் கொண்டும் எண்ணெய்யை தெளிக்கவே கூடாது. ஏனென்றால் எண்ணெய் பட்டால் Brake பிடிக்காது. எனவே இதை கட்டாயம் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இவை அனைத்தையும் நினைவில் கொண்டு செயல்படுங்கள். உங்களின் வாகனத்துடன் உங்கள் பயணம் இனிமையாகட்டும். நன்றி

- மன்னை ரஞ்சித்

அட்டைப்பட உதவி

வசா
PHOTOGRAPHY

**வசந்தன்**
hp: 9786828973

vasaclicks@gmail.com
vasa photography

# எங்கே செல்கிறது இளைய சமுதாயம்?



ஜெ.ஜவஹர்
மன்னார்குடி

இன்றைய இளைஞர்கள் மிக திறமைசாலிகள். இலகுவாக புரிந்து கொள்ளும் திறமை படைத்தவர்கள். புதிய விஷயங்களை கற்றுக்கொள்ளும் ஆர்வம் கொண்டவர்கள். புரியாததை புரியவில்லை என்று தயங்காமல் சொல்லக்கூடியவர்கள். கல்வியில் நிரம்ப முன்னேறியுள்ளார்கள். கணினி தொழில்நுட்பத்தில் கை தேர்ந்து விட்டதால் உலகில் பல்வேறு நாடுகளில் பணி செய்கிறார்கள்.

மாறுபட்ட சூழலில் வாழ்வதை சிரமமாக நினைப்பதில்லை. பழகி கொள்கிறார்கள். அவர்களின் ஆற்றல் அளப்பரியது. நிறைய திறமைகள். கடின உழைப்புக்கும் தயாராக உள்ளார்கள். ஆண்களும், பெண்களும் இவற்றில் சரிசமமாக உள்ளனர். இவையெல்லாம் நமது இளவல்களை பற்றிய நல்ல செய்திகள். கெட்ட செய்திகளும் உண்டு.

புகை பழக்கம், போதை பழக்கம் உள்ளவர்கள் அதிகரிக்கும் அபாயம் தெரிகிறது. செல்போன் மோகம் அதிகரித்ததால் தடம்புரண்டு போகும் அவல நிலை. உடல் ஆரோக்கியம் பற்றி அக்கறை இல்லை. விளையாட்டில் ஆர்வம் இல்லை. விளையாட்டுக் குழுக்கள் இல்லை. விளையாட்டுப்போட்டிகளும் இல்லை. சுயநலம் பெருகி விட்டது. நிறைய இளைஞர்கள் குடிக்கிறார்கள் என்ற செய்தி தினம் தினம் வந்து கொண்டே உள்ளது.

சுற்றுச்சூழலும் அதற்கு முக்கிய காரணம். முன்பெல்லாம், தேநீர் அருந்த  வச்சிக்கோ என்று செலவுக்கு பணம் கொடுப்பார்கள். இப்போது அது மது அருந்த  என்று மாறி கொண்டுள்ளது. சமூக நலன் குறைந்து மக்களிடத்தில் அச்சம் என்ற சந்தேகம் ஏற்படுகிறது வாழ்க்கைக்கு மிக அவசியமான ஒழுங்கு முறைகள், ஒழுக்கத்துடன் கூடிய கலாச்சாரம் காலாவதியாகிவிடுமோ?

இருபது ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்தது சூழல்?

இளைஞர்களிடையே கல்வி கற்கும் ஆர்வம் உருவாகிக் கொண்டிருக்கிறது. என்றாலும் பட்டதாரிகளை விரல் விட்டு எண்ணி விடலாம்.பத்தாம் வகுப்பு படித்து விட்டால் பயணம் போய்விடுவார்கள்.

திறமைகளும் சுமார்தான்.. தயங்கி தயங்கி பேசுவார்கள். தொழில்நுட்ப அறிவு மிக குறைவு. ஆனாலும் நல்லவர்கள் நிறைய இருந்தார்கள். தவறு செய்ய பயப்படும் சூழல் இருந்தது. சிகரெட் பிடிப்பதே ஒளிந்து கொண்டுதான் என்ற நிலை. உள்ளூர் தேநீர் கடையில் தேநீர் குடிப்பது கூட கௌரவ குறைவு என்று நினைத்தவர்களும் உண்டு. பெரியவர்களுக்கு எழுந்து நின்று மரியாதை செலுத்துவார்கள். கைப்பந்து, இறகு போட்டி, மட்டைப்பந்து விளையாட்டுக்களில் கலந்து கொள்வார்கள். ஆர்வம் கொண்டு ஆக்கபூர்வமான விஷயங்கள் நிரம்ப இருந்தன என்றாலும் கல்வியும் மற்ற திறமைகளும் குறைவாகத்தான் இருந்தது.

இப்போதைய தேவை அன்றைய இளைஞர்களிடத்தில் இருந்த ஆக்கபூர்வமான விஷயங்களோடு இன்றைய இளைஞர்களிடம் உள்ள ஆற்றல், திறமைகளை இணைத்தால் அருமையான தன்மைகள் உடையவர்களை கற்பனையில் பார்க்க முடிகிறது. எனவே இப்போதைய தேவை, திறமைகளுடன் கூடிய நல்ல இளைஞர்கள். இளைய சமுதாயத்தை ஆய்வு செய்யும் போது வெறுமனே அவர்களை குற்றம் சாட்டுவதை தவிர்த்து, அவர்களிடம் எதை எதிர்பார்க்கிறோம் என்பதை தெளிவுப்படுத்துதல் வேண்டும்.

<u>இளைஞர்களே! உங்கள் வாழ்க்கை பற்றி தொலைநோக்கோடு சிந்தியுங்கள்!</u>
ஆரோக்கியம் தான் ஒரு மனிதனுக்கு இயற்கை வழங்கியவற்றில் உன்னதமானது. மிகப்பெரிய சொத்து. ஆனால் அதன் அருமை அது இல்லாத போதுதான் தெரிகிறது. எனவே ஆரோக்கியம் பேணுங்கள். ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் அனைத்தையும் தவிர்த்திடுங்கள். உடல் ஆரோக்கியமாய் இருப்பதற்கு நல்ல உணவு அவசியம். ஆரோக்கியமாய் இருக்க நல்ல எண்ணங்கள் அவசியம்.

<u>கெட்ட பழக்கம் வேண்டாம்.</u>
விளையாட்டாக செய்ய ஆரம்பிக்கும் தவறுகள் பிற்காலத்தில் விட முடியாத கெட்ட பழக்கமாகி விடுகிறது. புகைபிடிக்கும் பெரும்பாலோனர் அப்படித்தான் சொல்கிறார்கள். இன்று சிகரெட்டால் நுரையீரலில் குணப்படுத்த முடியாத நோயால் அவதிப்படுவோர், மதுவால் கல்லீரலில் கடுமையான பாதிப்புக்கு ஆளானோர், சூதாட்டத்தில் பெரும் செல்வத்தை இழந்தவர்களெல்லாம் முதலில் பொழுது போக்கிற்காக மட்டும் தான் ஆரம்பித்திருப்பார்கள். எனவே பொழுது போக்கிற்காக என்று எதை செய்ய நினைத்தாலும் சற்று யோசியுங்கள்.

உங்களை நம்பி ஒரு குடும்பம், உங்கள் மீது பாசமும் நேசமும் கொண்டவர்கள் உங்களையே நம்பியுள்ள நெஞ்சங்களையும் ஒரு கணம் மனதில் கொண்டு வாருங்கள்.

<u>திறமைகளை வளருங்கள் (skill development)</u>

தனிப்பட்ட திறமைகளை வளர்த்துக்கொள்ளுங்கள். இளமைக் காலத்தில் நாம் வளர்த்துக் கொள்ளும் திறமைகள் நமது வாழ்நாள் முழுவதும் நமக்கு பலன் தரக்கூடியது.

நட்பு வட்டம்
நல்ல நண்பர்கள் ஒருவருக்கு அமைந்துவிட்டால் அதைக் கொண்டு ஏராளமாய் சாதிக்க முடியும். அதேசமயம் கெட்ட நண்பர்களால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக நேரிடும். எனவே நண்பர்கள் வேண்டும், அவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும்.

நேரம் தவறாமை
ஒவ்வொரு காரியமும் குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். காலந்தாழ்ந்து செய்யும் வேலைகள் உரிய பலன் தராது. எனவே நேரம் தவறாமை மிக முக்கியமாக கடைபிடிக்க வேண்டிய திறமை. பேசும் திறன் பேசும் போது தெளிவாக, தன்மையாக பேச வேண்டும். அதே சமயம் நிதானமாக நம் எண்ணங்களை புரிய வைக்க வேண்டும்.

சுத்தம் பேணுதல்
நம்முடைய இருப்பிடத்தையும், உடைகளையும் பொருட்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். இது சுகாதாரம் மட்டுமின்றி, நம்மீது பிறருக்கு நன்மதிப்பை ஏற்படுத்தும்.

பெற்றோர்களின் பங்கு மிக முக்கியமானது
பிள்ளைகள் மீது பெற்றோர்களின் கண்காணிப்பு மிக அவசியம். நம்மை சுற்றி நடக்கும் பல சம்பவங்களில், ஒரு தவறுக்கான சூழல் ஏன் உருவானது என பார்க்கும் போது கண்காணிப்பு இல்லை என்பதே பதிலாக வருகிறது. எனவே பெற்றோர்கள் தம் பிள்ளைகள் மீது எந்த அளவு பாசம் வைத்துள்ளீர்களோ அந்த அளவு கண்காணிப்பும் அவசியம்.

நேர்மறை எண்ணங்கள்
உங்கள் பிள்ளைகள் திறமையானவர்களாக நல்லவர்களாக வருவார்கள் என்று நீங்கள் உறுதியாக நம்புங்கள். ஒரு சமயம் 10ஆம் வகுப்பு மாணவி, பள்ளி செல்வதே பெரிய சிரமமாக உள்ளதென்று என்னிடம், பள்ளி ஆசிரியைகளையும் முதல்வரையும் பற்றி குற்றப்பட்டியல் வாசித்தார். இத்தனைக்கும் நன்றாய் படிக்கும் மாணவி.


பிள்ளைகளை மிரட்டியே நல்ல மதிப்பெண் எடுக்கவைக்க வேண்டுமென்று முயற்சிக்கிறார்கள் என்று எனக்கு புரிந்தது. பள்ளி முதல்வரை சந்தித்தேன். நன்றாக படிக்கும் மாணவி பயத்தின் காரணத்தால் மதிப்பெண் குறைகிறது. நீங்கள் ஏன்

நேர்மறையாக அணுகக்கூடாது?

உன்னால் முடியும் நிச்சயமாக நீ வெல்வாய் என்று நம்பிக்கையை உள்ளங்களில் விதையுங்கள் என்றேன். சில வாரங்களில் அவரை சந்தித்தபோது நீங்கள் சொன்னபடி என் அணுகுமுறையை மாற்றினேன், நல்ல முன்னேற்றம் நன்றி என்றார். அந்த வருடம் அந்த பள்ளியில் அதற்கு முன்னில்லாத அளவுக்கு அதிக மதிப்பெண்களோடு தேர்ச்சி பெற்றார். அந்த மாணவி 92 சதவீதம் மதிப்பெண் பெற்று குடும்பத்திலேயே அதுவரை யாரும் பெறாத மதிப்பெண் என்ற மதிப்பை பெற்றார். இது நேர்மறை அணுகுமுறைக்கு கிடைத்த வெற்றி.

<u>பெற்றோர்கள் நல்லவற்றை கற்றுக்கொடுங்கள்</u>
நம்பிக்கை வையுங்கள், நல்லவர்களாக வருவார்கள். நல்ல பண்பாடு, பழக்க வழக்கங்களை கற்றுக்கொடுங்கள். ஆனந்தம் என்றும் தங்கும்.

- ஜெ.ஜவஹர்
மன்னார்குடி



இச்சைகளின்
உச்சம் தொட்டு

மிச்சமாய்
எச்சமாவதுதான்
வாழ்க்கை...



ரா.ராஜகுரு
மன்னார்குடி



# என் புதல்வி

பல வனங்களின் வண்ணங்களை கொய்திட்டேன்
என் புதல்வி கார்மேக குழல் நிறமாக்கிடவே
பார் கடல் கடைந்தேன் அமுதையும் களவாடினேன்
என் புதல்வி பசி தீர்த்திடவே
பொன்வண்டு வம்சம்தனை சிறைப்பிடித்தேன்
என் புதல்வி பொன்மேனி மறைத்திடவே
வள்ளுவனையும் அகத்தியனையும் மீட்டெடுப்பேன்
என் புதல்வி செவ்விதழ் மலர்ந்திடவே
தமிழன்னை கரம் சேர்ப்பேன்!
என் புதல்வி சிரம் காப்பேன்!

- அருள் பாண்டியன்



கல்லைக் கடவுளாய்
கண்டவன்...

காலனையும் கடவுளாய்
கொண்டவன்...

கந்துவட்டிக்காரனையும் கடவுளாய்
பார்த்ததின் விளைவு..

வாழ வாங்கிய கடன்
வாய்க்கரிசியாய் வட்டி....

ராஜேஷ்
மன்னை

# கையெறு நிலையில் கடலோடிகள்


இராசசேகரன் மன்னை

கன்னியாகுமரி இன்று கதறும் குமரியாகிப்போனது. இயல்பாக கடலுக்கு செல்லும் கடலோடியின் வாழ்க்கையே போராட்டம் நிறைந்தது. பதற்றத்தை பந்தியில் வைத்து ஒவ்வொரு நொடியும் பரிமாரிக்கொள்ளும் விசித்திர வாழ்க்கையை பெற்றவர்கள். இதை மீன்களை சட்டியில் சமைத்து தட்டில் சாப்பிடுகிறவர்களால் உணர முடியாது.

அப்படி அவர்கள் உணர்ந்திருந்தால் இந்த தமிழர்நாடு இன்று அதே வழக்கமான இயந்திர வாழ்க்கையை வாழ்ந்திருக்காது. சிந்தனை சினமாகி இருக்கும், நாடு அதிர்ந்திருக்கும், அரசாங்கம் ஆட்டம் கண்டிருக்கும், பன்னாட்டு முதலாளிகளின் அடித்தளங்கள் முடமாகி இருக்கும்...

ஆனால் தமிழரினம் தான் விசித்திரமானதே! எதையும் இலகுவாக ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் கொண்டது, எவரையும் வாழவைக்கும் நல்லெண்ணமிக்கது. மறப்போம், மன்னிப்போம் என்ற மறதி குணமுடையது. இதனால் நாம் இன்றளவும் நிலைத்திருக்கிறோம் என்பது ஒருபுறமிருந்தாலும் அதிகமாக சுருங்கி இருக்கிறோம் அதைவிட அதிகமாக இழந்திருக்கிறோம் என்பதே உண்மை.

இவ்வளவும் இழந்து நாம் நம்மை உணர்ந்திருக்கிறோமா என்றால் இல்லை என்று தான் கூற வேண்டும். மாறாக சிந்தனை மழுங்கி வேகமாக தேய்ந்து கொண்டிருக்கிறோம்.

இல்லை என்றால் ஒகி புயல் என்ற பேரவலம் நமது பூர்வக்குடி கடலோடிகளையும் அவர்களின் வாழ்விடத்தையும் சீரழித்தும், அதிலிருந்து மக்களை காக்க இந்த மத்திய, மாநில அரசுகள் அணுவளவு கூட அசைவுக்காட்டாததை நாமும் மரமாக நின்று வேடிக்கை பார்ப்போமா? எதனால் வேடிக்கை பார்த்தோம் அவர்கள் நம் மக்கள் நமது உறவுகள் நம்முடைய சகோதர சகோதரிகள் என்ற இனம் சார்ந்த சிந்தனையற்று மழுங்கி போனதால் உணர முடியவில்லை. இந்த மழுங்கை மரத்தை சாய்க்கும் அளவிற்கு புயலும் வீசவில்லை போலும்.

அதுவும் சரிதான் வெறும் 25 கடல் மைல் தூரத்திற்கு அப்பால் நமது தாய்மொழி தமிழை பேசிய ஒரே காரணத்திற்காக ஏழு கோடி தமிழர்கள் அருகில் இருக்கிறார்கள் என்ற அச்ச உணர்வின்றி நாம் அங்கம் வகிக்கின்ற ஒன்றியத்தின் உதவியோடு நமது மக்கள் 1.5 இலட்சம் பேரை கொன்று குவித்தான். குழந்தைகள் என்றும் பாராமல் பள்ளி வளாகத்திலேயே குண்டு போட்டான்.

உலக நாடுகளே அதிர்ந்தது. நாம் அசையவில்லையே. அவ்வளவு பெரிய இழப்பிற்கு ஆடாத சதையா! குமரி மண்ணின் இரண்டாயிரம் மீனவர்களுக்காக ஆடப்போகிறது.

பாவம் இந்த கடலோடிகள், அவர்கள் வாழ்வில் தான் எத்தனை சோகங்கள். இலங்கை இராணுவம் சுடுகிறது. எல்லை தாண்டினான் என்று கைது செய்கிறது. படகுகளை சிறைப்பிடிக்கிறது. அவர்களுக்கு உயிர் பயத்தையும் கொடுத்து உடைமைகளையும் அழித்து அவர்களை பொருளாதார மாற்றுத்திறனாளியாக்கி கடலுக்கே வராத அளவிற்கு அச்சுறுத்துகிறது. தற்போது புதிதாக இந்திய இராணுவமும் சுடுகிறது.

இதற்கெல்லாம் ஒரே காரணம் கச்சத்தீவை இழந்தது. இன்றைய மைய அரசு ஆட்சியை பிடிப்பதற்காக கடல் தாமரை மாநாடு நடத்தி மீனவர்களின் துயர்துடைக்க தனி அமைச்சகம் அமைப்போம். சிங்களத்திடம் இருந்து தமிழக மீனவர்களை காப்போம். இலங்கை அரசிடமிருந்து கச்சத்தீவை மீட்போம் என்று கூறியது. நீங்கள் சாதாரணமாக சிந்தித்து பாருங்களேன், காங்கிரசு அரசின் ஒரு ஒப்பந்தத்தில் தாரைவார்க்கப்பட்ட கச்சத்தீவை அதன் பரம எதிரியான பாரதிய சனதா கட்சியின் அரசால் இன்னொரு ஒப்பந்தத்தால் மீட்க முடியாதா? மனமிருந்தால் மீட்க முடியும், மனமிருக்காது என்பதே உண்மை.

அப்படி அவர்களுக்கு மனமிருந்தால் இப்படியொரு மீனவப்படுகொலையை நாம் சந்தித்திருக்க மாட்டோம். புயல் வருகிறது என்று எந்த எச்சரிக்கையையும் செய்யாமல் மீனவர்களை நடுக்கடலில் தத்தளிக்க விட்டதை எப்படி இயற்கையின் சீற்றம் என்று கருதமுடியும்?

அப்படியே இதை இயற்கையின் பேரழிவு என்று எடுத்துக் கொண்டாலும் இதிலிருந்து தனது நாட்டின் மக்களை மீட்க தனது இராணுவத்தை பயன்படுத்தக்கூடாதா? உலகின் ஆறாவது பெரிய இராணுவம் இந்திய இராணுவம். உலகின் நான்காவது பெரிய கப்பற்படை இந்திய கப்பற்படை. இதெல்லாம் எதற்காக நமது பெருமை என்று நெற்றியில் பச்சை குத்திக்கொள்வதற்காகவா?

புயல் தாக்கிய அடுத்த நொடி மத்திய உள்துறை அமைச்சகம் தனது கட்டமைப்புகளை பயன்படுத்தி தனது குடிமக்களை பாதுகாத்திருக்க வேண்டாமா. அதற்கு மாநில அரசு அழுத்தம் கொடுத்திருக்க வேண்டாமா?

ஐயா இராணுவம் வேண்டாம் ஒரு இலட்சம் பயற்சிப் பெற்ற வீரர்களைக் கொண்டு உத்தரப் பிரதேச மாநிலம் காசியாபாத், பஞ்சாப் மாநிலம் பட்டியாலா, மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தா, அசாம் மாநிலத்தில் கௌகாத்தி, ஒடிசா மாநிலத்தில் கட்டாக்,

தமிழ்நாட்டில் அரக்கோணம், மகாராட்டிரம் புனேயில், குசராத் மாநிலம் காந்திநகரில், பீகார் மாநிலம் பாட்னா மற்றும் ஆந்திர மாநிலம் குண்டூரில் என்று பத்து இடங்களில் உள்ள தேசிய மீட்பு படையினரின் ஒரு பகுதியை பயன்படுத்தி அவர்களுக்கு உதவுவதற்கு இந்திய வான்படையின் பேரிடர் மீட்பு விமானங்களை பயன்படுத்தி இருந்தால் ஒரே நாளில் எமது மீனவர்களை மீட்டிருக்கலாமே! பிறகெப்படி இதனை இயற்கை சீற்றமாக கணக்கிட முடியும்?

கடலை மையப்படுத்தி பன்னாட்டு நிறுவனங்களின் வருமானத்திற்காக நிறைவேற்றப்பட இருக்கும் சாகர்மாலா திட்டத்திற்காக, கடலைவிட்டு கடலோடிகளை அப்புறப்படுத்த அவர்களை அச்சுறுத்தும் செயலாகவே தெரிகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் புயலில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வேறுதொழில் செய்து மறுவாழ்வு பெறுவதற்கு 5 இலட்சம் ரூபாயை தமிழக அரசு வழங்குமென்ற தமிழக முதல்வரின் அறிவிப்பு உறுதிப்படுத்துகிறது.

உதாரணத்திற்கு தூத்தூர் மறைமாவட்டத்திற்கு உட்பட்ட நீரோடி, மார்த்தாண்டம் துறை, வள்ளவிளை, இரவிபுத்தன்துறை, சின்னத்துறை, தூத்தூர், பூத்துறை, இரயுமன்துறை ஆகிய 8 கிராமங்களிலிருந்து காணாமல் போன மீனவர்களின் எண்ணிக்கை மொத்தம் 661. இவர்களின் நிலை என்னவென்றே தெரியவில்லை. இது ஒரு மறைமாவட்டத்தின் கணக்கு. இதுபோன்று பல கிராமங்கள் உள்ளது.

இந்த இழப்பினை அலட்சியமாக கடந்து விடமுடியாது. இதில் எத்தனை படித்த, படித்துக்கொண்டிருக்கிற இளைஞர்கள், புதிதாக திருமணம் முடித்தவர்கள், அக்கா, தங்கைகளை கரையேற்ற கடலில் கரைந்தவர்கள், குடும்பத்தலைவர்கள், பிழைப்புத்தேடி வந்த ஏதும் அறியாத அப்பாவிகள்! இவர்களுக்கெல்லாம் எத்தனை கனவுகள், எத்தனை இலட்சியங்கள், எதிர்கால திட்டங்கள் அத்தனையும் இந்த அயோக்கிய அரசியல்வியாதிகளால் மீனுக்கு இரையாகிப் போகின.

இதன் விளைவு குமரி மாவட்டத்தை கேரள மாநிலத்தோடு இணைத்து விடுங்கள் என்ற கோரிக்கையில் வந்து நிற்கிறது.

ஐயா நேசமணி தலைமையில் பல போராட்டங்களை சந்தித்து பலவிதமான அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டு அன்றைய மலையாள அரசின் துப்பாக்கி சூட்டிற்கு பலரை பலிக்கொடுத்து அவர்களின் உயிரை ஆயுதமாக்கி எந்த சமரசத்திற்கும் இடமின்றி போராடிய மக்களின் வாரிசுகள் இன்று யாருடைய பிடியில் இருந்து வந்தோமோ அவர்களிடமே செல்கிறோம் என்கிறார்கள்.

தனக்கு வாக்களித்து தனது வரிப் பணத்தை மூலம் அரசின் இயந்திரத்தை இயங்க செய்யும் மக்கள் தங்களை வாழவைப்பதற்கு இந்த மாநிலத்திற்கு துப்பில்லை

எங்களை அண்டை மாநிலத்தோடு இணைத்துவிடுங்கள் என்று கூறுவது எவ்வளவு பெரிய கேவலம்.

மொழிவாரி மாநில பிரிப்பில் நாம் பல பகுதிகளை இழந்துள்ளோம். நமது உயிரை காக்கின்ற காவிரி, முல்லைபெரியாறு, பாலாறு போன்ற நீர்ப்பிடிப்பு பகுதிகளையும் ஏராளமான நிலப்பரப்புகளையும் தமிழரின சொந்தங்களையும் இழந்து தவிக்கிறோம். தன்மானத்தோடு தற்சார்பை நிலைநிறுத்தி வாழ்ந்த நாம் இன்று அதே அண்டை மாநிலங்களிடம் கையேந்தி வாழ்கிறோம்.

ஆனாலும் இழந்த உரிமைகளை மீட்க இன்றுவரை போராடிக் கொண்டிருக்கும் இந்நிலையில் நாம் போராடி பெற்ற குமரி போன்ற சிறுப்பகுதிகளை கூட இந்த அயோக்கிய ஆட்சியாளர்களால் அறுபது ஆணடுகளில் வேண்டாம் என்று கூறுமளவிற்கு தள்ளப்பட்டிருக்கிறோம். இந்த கோரிக்கை ஒகி புயல் இழப்பால் மட்டும் வந்தது அல்ல, தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டதால் ஏற்பட்ட விரக்தியால் வருகிறது. இதற்கு இதுவரை ஆட்சி செய்த அரசுகளே பொறுப்பேற்க வேண்டும்.

இப்போதும் தமிழரினம் தான் விழிப்படைய வேண்டும். நமக்கு எதிரி பாரதிய சனதா கட்சி, காங்கிரசு அரசுகள் அல்ல. இந்தீய ஒன்றியமும் அதன் ஆரிய தமிழர் இனப்பகையும் இவர்களின் பொருளாதார கொள்கை தான் என்பதை அறிவோம்.

தமிழரினத்தின் தற்சார்பு பொருளாதாரத்தின் கருவான நெசவை இழந்துவிட்டோம், உழவை காக்க போராடுகின்றோம், தற்போது கடலோடியின் உரிமையையும் இழந்தால் தன்மானத்தை இழந்து பன்னாட்டு நிறுவனங்களின் கூலியாகி, அடிமையாகி பிறகு அகதிகளாக்கப்படுவோம், இனியாவது இதை உணர்வோம்.

நம்மை காப்பாற்ற இவர்களிடம் கோரிக்கை வைப்பதை விடுத்து நமது வரிப்பணத்தைக் கொண்டு நம்மையே அழிக்க துடிக்கும் இவர்களுக்கு ஆணையிட பழக்கப்படுவோம். புயல் இயற்கையானது, மீனவர்கள் மரணம் செயற்கையானது என்று இவர்கள் செவிகள் கிழியும் அளவிற்கு உரக்க கூறுவோம்.

நம்மை நாம் தான் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர்வோம். வடக்கு எல்லையில் வருட தொடக்கத்தில் தமிழர் கடலில் தொடங்கிய தை புரட்சியின் வீரியமான விதையை வருட இறுதியில் தெற்கே துளிர்விட செய்வோம். பண்பாட்டைக் காப்பாற்றிக் கொள்ள களம் அமைத்த தமிழரினம் இன உரிமையை மீட்டெடுக்க தமிழர்நாடெங்கும் களம் அமைப்போம். மீண்டுமொரு தைப்புரட்சியைத் தொடங்குவோம். நிவாரணத்தைத் தவிர்த்துவிட்டு நிரந்தரத் தீர்வை நோக்கி தமிழரினத்தை நகர்த்துவோம்.

**- இராசசேகரன் மன்னை**

# மூலிகை உப்பு மருத்துவம்



ராணிச்சந்திரன்
மன்னார்குடி

விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ற வாறு அதிவேகமான வாழ்க்கை சூழ்நிலையில் சிக்கிகொண்டிர்க்கும் மக்கள் நோயை குனப்படுத்த மூலிகை சாறு சாப்பிடவோ, மூலிகை சூரணம் கசாயம் போட்டு சாப்பிடவோ முடிவதில்லை. அனைத்து நோய்களுக்கும் மூலிகையில் மருந்து இருக்கிறது என்று சித்தர்கள் கூறியது உண்மை என்பது அனைவருக்கும் தெரியும். இருந்தும் பயன்படுத்த முடியவில்லையே.

| நோய் | மூலிகை | உறுப்பு |
|---|---|---|
| சளி | தூதுவளை | நுரையீரல் |
| மஞ்சட்காமாலை | கீழாநெல்லி | கல்லீரல் |
| வயிற்றுபுண் | மனத்ததக்காளி | இரைப்பை |
| குடல்புண் | அகத்திகீரை | பெருங்குடல், சிறுகுடல் |
| கொலஸ்ட்ரால் | செம்பருத்தி | இதயம் |
| கல் அடைப்பு | சிருகண்பீழை | கிட்னி |
| மூலம் | குப்பை மேனி | மலவாய் |

மூலிகை உப்பு (அ) உயிர் உப்பு (Bio Salt)

குப்பைமேனி உப்பு

குப்பையாக கழிவுகள் சேர்ந்த உடலை மேனியாக்கும்

1) கிருமி நாசினி
2) கப நாசினி
3) வாத நாசினி
4) மூல நாசினி

குப்பையை மேனியாக்கும் குப்பைமேனி உப்பு சாப்பிடுவதற்கு எளிமையாக இருக்கும். சுவையாகவும் இருக்கும் சுவையூட்டியாகவும் இருக்கும். பித்த, வாத, கப நாடிகளை சமன்படுத்தும். இறந்த செல்கள் அனைத்தையும் நீக்கி புது செல்களை உற்பத்தி செய்யும் கிருமிகளை அழித்து நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப் படுத்தும்.

கடல் நீரிலிருந்து வரும் உப்பு தான் நாம் பயன்படுத்தும் உப்பு. அது அமிலத்தன்மை உள்ளது. உடலுக்கு கெடுதி.

மண்ணிலிருந்து வரும் உப்பு தான்  மருத்துவத்துக்கு பயன்படுத்தும் உப்பு. இந்து உப்பு (rock salt). அது காரத்தன்மை உள்ளது.

மூலிகையில் இருந்து வரும் உப்பு தான் நோய்களை குணபடுத்தும் உப்பு. உயிர் உப்பு (bio salt). இது தான் உயிர்த்தன்மை உள்ளது.

மூலிகை உப்பு - மூலம் - இறைசக்தி மூலத்தை ஈகையாக தரும் மூலிகையில் கிடைக்கும் உப்பு எளிதில் பயன்படுத்தவும், கழிவுகளை நீக்கவும், நோய்களை குணப்படுதவும், உறுப்புகளை மீண்டும் செயல்பட வைக்கவும், பலப்படுத்தவும் பயன்படுகிறது. மூலிகை உப்பை பயன்படுத்தி ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் வாழுங்கள்.

**- ராணிச்சந்திரன்**

---

## ஆரல்கதிர் மருகன்



நூல் ஏதும் எழுதினால்
பாழ்பட்டு போவாய் நீ!

கோடுகள் வரைந்தாலோ
கேடுகள் வந்தடையும் உன்னை!

வழக்குகள் நடத்தினால்
பிணக்குகள் தீண்டும் உன்னை!

இயற்கையை நேசித்தால்
முழங்கை ஒடிப்படலாம்!

துண்டறிக்கை வைத்திருந்தால்
கண்டவுடன் சிறைச்சாலை!

முகநூலில் முழங்கினாலோ
அக நடுக்கம் கொள்வாய் நீ!

ஒன்றுகூடி ஓலமிட்டால்
உடனடியாய் குண்டர் சட்டம்!

பேய்கள் அரசாண்டால்
பிணம் தின்னும் சாத்திரமாம்!

பிணமாய் இருக்கும் வரை
நாய் கூட தின்னும் உன்னை!

உயிர்த்தெழுப்ப முயற்சி செய்
உளம் புதைந்த உணர்வுகளை!

# புத்தியும் மனதும்

புத்தியும் மனதும். இந்த தலைப்பை படிக்கும்போதே உங்களில் சிலர் புரிந்து கொண்டிருப்பீர்கள் இவள் என்ன கூறப்போகிறாள் என்று. இந்த புத்தியும் மனசும் இருக்கே இதுதாங்க நாம் வாழும் வாழ்க்கையில் ஏற்படும் சந்தோசம், துக்கம், ஏமாற்றம், உற்சாகம் எல்லாவற்றிற்கும் இவை இரண்டும் மட்டுமே காரணம்.

என்னங்க புரியலையா? சரி நாம்ம தலைப்புக்குள்ள போவோம். நம்மில் சிலருக்கு இவை (புத்தி மற்றும் மனது) இவை இரண்டிற்கும் முழுமையான அர்த்தம் தெரியாது. நம்மில் சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறோம் புத்தி என்றால் மூளை (Brain), மனது என்றால் இதயம் (Heart). அதுதான் இல்லை.

மூளையின் வேலை நம்மை சிந்திக்கவைப்பது. அந்த சிந்தனையில் பிறக்கும் எண்ணங்களே நம்மளுடைய செயலாக மாறுகிறது. இது எல்லார்க்கும் தெரிந்தவை தானே என்று நீங்கள் உங்களுக்குள் கேட்பது எனக்கு புரிகிறது. சரி, மூளை சிந்திக்க வைக்கிறது, மனது நம் வாழ்வில் என்ன வேலை செய்கிறது?

நாம் எல்லாரும் பலமுறை இவ்வார்த்தையை கூறியிருப்போம் எனக்கு இது சரி என்று என் அறிவுக்கு தெரியும் ஆனால் என் மனம் விரும்பியவாறு செய்தேன்.

இதற்கு அர்த்தம், நம் அறிவுக்கு எது சரி எது தவறு என்று பிரிக்கத்தேரியும். ஆனால் நாம் சிலமுறை அல்லது பலமுறை நம் அறிவு சொல்வதை கேட்காமல் நமக்கு பிடித்தவாறு செய்வோம். இதற்கு எளிமையான உதாரணம், பேருந்தில் அல்லது இரயிலில் பயணம் செய்யும் போது இளங்கன்றுகள் வண்டியின் படிப்பலகையில் நின்று பயணம்செய்வார்கள். அவர்களுக்குத் தெரியும் அது தவறு என்று, ஆனால் அவர்கள் மனம் விரும்பிய படி நடந்து கொள்வார்கள்.

ஆனால் உண்மை என்னவென்றால் அதற்கு மனம் காரணம் அல்ல. நம்மளுடைய ஏற்றுக்கொள்ளும் தன்மையே காரணம். இதை ஆங்கிலத்தில் acceptance என்று கூறுவார்கள். எந்த எண்ணங்கள் நீங்கள் அதிகமாக நினைகிறீர்களோ அந்த எண்ணங்களை நம் உடம்பில் உள்ள வளுரூக்கி (Harmone) தன்னுடைய கட்டளையாக (Instruction) ஏற்றுக்கொண்டு செயல்படுகிறது.

உதாரணமாக, ஒரு மாணவன் நான் தேர்வில் 80% மதிப்பெண் எடுக்க வேண்டும் என்று ஆழமாக நினைத்தால், அந்த எண்ணம் 100% வலுரூகியில் (Harmone) பதிவாகி விடும்.. இவ்வாறு இருக்கையில் நிச்சயம் அந்த மாணவன் தேர்வில் 80% மதிப்பெண் எடுத்து சாதிப்பான். இவ்வாறு இல்லாமல் அந்த மாணவன் தன்னுடைய

எண்ணங்களை ஆழமாக பதியவிக்கவில்லை என்றால், அவனால் தேர்வில் அந்த மதிப்பெண்ணை எடுக்க இயலாது.

நம்முடைய ஒவ்வொரு அசைவிற்கும் வளுரூக்கி தான் காரணம். அந்த வளுரூக்கிக்கு நம் எண்ணங்கள் தான் கட்டளைகளை பிறப்பிக்கும்.
மனிதன் எப்போதும் ஒரு விசயத்தில் இரண்டு எண்ணங்களை சிந்தித்து கொண்டிருப்பான். அதில் எந்த எண்ணங்கள் அதிக சதவீதத்தை இடம் பிடிக்கிறதோ அதுவே வளுரூக்கிக்கு கட்டளையாக மாறும். அந்த கட்டளையின்படி வளுரூக்கி செயல்படும்.

வேறு ஒரு உதாரணம் எடுத்துக்கொள்வோம். நமக்கு நெருங்கியவர் ஒருவர் இயற்கை எய்தினார் என்று வைத்துக்கொள்வோம். அப்போது நம் அறிவிற்கு அதாவது புத்திக்கு உண்மை என்னவென்று தெரியும். அதாவது அந்த மனிதர் இறந்துவிட்டார் என்ற உண்மை. இந்த நேரத்தில் எண்ணம் 1க்கு (30%) உண்மை தெரியும். எண்ணம் 2 (70%) ஒப்புக்கொலள்வதில்லை என வைத்துக்கொள்வோம். அந்த நேரத்தில் எண்ணம் 2ன் வெளிப்பாடுதான் துக்கம் மற்றும் அழுகை. எப்பொழுது எண்ணம் 1 மற்றும் எண்ணம் 2 சமநிலைக்கு வருகிறதோ அன்று நாம் உண்மை நிலையை புரிந்து கொள்கிறோம். இதில் எண்ணம் 2 ஐ நாம் மனது என்கிறோம். உண்மையில் அது மனது அல்ல எண்ணம் தான்.

இதன்மூலம் நான் கூற வருவது என்னவென்றால், மனது என்பது இதயம் அல்ல அது நம்முடைய இன்னொரு எண்ணம் தான். மனது வலிக்கிறது என்று நாம் கூறுவது, நம்முடைய வளுக்கூறு உண்மை தன்மையை ஒப்புக்கொள்வதில்லை என்பதே காரணம். எப்பொழுது நம்முடைய இரு எண்ணங்களும் ஒரே கோட்பாட்டில் இருக்கிறதோ அன்று மனிதன் தன் வாழ்வில் உண்மை நிலையை உணர்ந்து வாழ்கிறான் என்று அர்த்தம். இந்த இரு என்னங்களைதான் நாம் புத்தி மனது என்று இரு பெயர்களை வைத்து அழைக்கிறோம்.

-விக்னேசுவரி

# சாகர் மாலா



வசந்தன்
மன்னார்குடி

தமிழில் கடல் மாலை என்று பொருள். இந்திய கடலோரப் பகுதியில் துறைமுகங்களை அதிகப்படுத்தி மாலையைப் போல் இணைக்கப் போகிறார்கள்.

உலக திட்ட முதலீட்டில் இதுவரை அதிக செலவில் போடப்பட்ட திட்டம் இது (8,00,000 கோடி).

இந்த திட்டத்தை வைத்துதான் மீத்தேன், ஹைட்ரோகார்பன், போன்ற கொடுஞ்செயல் திட்டமிடப்படுகிறது. இந்த திட்டத்தின் மையக்கரு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி.

சாகர் மாலா திட்டத்திற்கு 25 மார்ச் 2015ல் இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. தேசிய சாகர் மாலா உயர்மட்ட குழுவில் (NSAC) இந்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் மற்றும் இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கும் மத்திய அரசின் துறைகளுக்கான அமைச்சர்கள் மற்றும் மாநில முதல்வர்கள் அல்லது மாநில துறைமுக அமைச்சர்கள் உறுப்பினர்களாக இருப்பர். இந்திய அரசு, சாகர்மாலா வளர்ச்சி நிறுவனத்தை (Sagarmala Development Company) சூலை 20, 2016ல் 1,000 கோடி ரூபாய் மூலதனத்துடன் துவக்கியது. இந்திய அரசு தனது பங்காக சாகர் மாலா வளர்ச்சி நிறுவனத்தில் முதலில் 90 கோடி ரூபாய் பங்கு முதலீடு செய்துள்ளது.

ஏற்றுமதி இறக்குமதிக்கு தேவையான துறைமுகங்கள் அமைப்பது, அந்த துறைமுகங்களை சாலை வழியாகவும் ரயில் வழியாகவும் மற்றும் ஆறுகள் வழியாகவும் இணைப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. இதுமட்டுமல்ல, நான்காவது வாயிலாக நமது விவசாய நிலப் பகுதிகளில் குழாய் மூலம் இணைக்கவும் திட்டம் உள்ளது. இப்போது புரிகிறதா, மீத்தேன் வாயுவை எப்படி ஏற்றுமதி செய்ய போகிறார்கள் என்று, இத்திட்டம் நமது வரலாற்று பின்னணியை மையமாக கொண்டே ஆரம்பிக்கிறார்கள் என்பது வேடிக்கை. ஆம் 5000 வருடத்திற்கு முன்பு தமிழர்களின் கடல் வழி வணிகத்தை வைத்துதான் திட்டமிடப்படுவதாக கூறப்படுகிறது

<u>இத்திட்டத்தின் சாதக பாதகங்களை பார்ப்போம்.</u>
இதன் சாதகம் பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டுமே. அப்போ பாதகம், சந்தேகமே வேண்டாம் அறிவார்ந்த மக்களாகிய நமக்குத்தான்.

குறிப்பு : இத்திட்டத்தினால் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் நம் பகுதி ராணுவ கட்டுப்பாட்டில் வந்துவிட வாய்ப்புள்ளது.

இத்திட்டத்தில் 12 பெரிய துறைமுகங்களும் 200 சிறிய துறைமுகங்களும் வருகிறது. இது மட்டுமல்ல 1208 தீவுகளை தனியார் மையத்திடம் ஒப்படைத்து நவீன மையம் ஆக்குவதும் திட்டமிடப்படுகிறது. இப்போது புரிகிறதா கச்சதீவு ஏன் கொடுக்கப் பட்டது, யாரிடம் கொடுக்கப்பட்டது என்று. மற்றும் 7,500 கி.மீ. நீளமான கடற்கரை சாலைகள், 14,500 கி.மீ கப்பல் போக்குவரத்து கடல்வழி பாதைகள் 26 ரயில் பாதைகள் மற்றும் 101 ஆற்றுப் பாதைகளும் இத்திட்டத்தில் அடங்குகிறது. இதுமட்டும் அல்லாமல் 12 ஸ்மார்ட் சிட்டிஸ் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்த நான்கு தலைப்பாக பிரிகிறார்கள்
1. Port modernization
2. New port development
3. Port connectivity enhancement,
4. Coastal community development

Port modernization new port development இத்திட்டத்தின்படி இந்தியாவை 14 மண்டலமாக பிரிக்கிறார்கள். அதில் தமிழ் நாட்டில் மூன்று மண்டலம் 1076 கி.மீ அதாவது நம் கடற்பகுதி முழுவதுமாக அடங்குகிறது. இத்திட்டத்தை மேம்படுத்த முதலில் அப்பகுதி மக்களை அப்புறபடுத்துவார்கள் இடங்களை ஆக்கிரமிப்பு செய்வார்கள். பிறகு துறைமுக கட்டுப்பாட்டில் கொண்டு வந்து கடலை ஆழப்படுத்துவார்கள். அதற்கு தடைகளாக இருப்பவர்கள் மீனவ மக்கள். இப்போது புரிகிறதா மீனவர்கள் தொடர்ந்து சுட்டுக் கொல்லப்படுவதும், கடலில் கச்சா எண்ணெய் கொட்டி மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கபட்டதும், சுனாமி போன்ற அச்சுறுத்தல்களும் ஏன் என்று!

Port connectivity enhancement இத்திட்டத்தின்படி ஏற்றுமதி செய்யும் பொருட்களை துறைமுகங்களுக்கு கொண்டு செல்வதற்கு சாலைகளை அனைத்து துறைமுகங்களோடும் இணைக்க வேண்டும். எதை ஏற்றுமதி செய்ய போகிறார்கள்? ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால் நமது வளங்களை. அந்த சாலைகள் 60மீ முதல் 200மீ வரை அகலமாக இருக்க வேண்டும். அந்த சாலையின் வழியாக இராணுவ டாங்கிகள் செல்லும் அதற்கு ஏற்ப பலமாக இருக்க வேண்டும். கடற்கரை சாலைகளில் சில இடத்தில் இராணுவ விமானங்கள் தரையிறங்க தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துவிட்டது (இதை இங்கு குறிப்பிடுகிறேன்). இப்போது புரிகிறதா புறவழி சாலைகள் மேம்பாட்டு திட்டம் மட்டும் ஏன் சிறப்பாக செயல்படுகிறது என்று.

Coastal community development இத்திட்டத்தின்படி இவர்கள் கூறுவது கடல் சார்ந்து வாழும் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது என்று. இது

இவர்களின் சட்ட சிக்கல்களை சரி செய்வதற்காக கூறுகிறார்கள். ஏன் அப்படி சொல்கிறேன் என்றால் இந்த திட்டத்தில் இப்படி ஒரு பகுதி இல்லவே இல்லை. மீனவர்களை மீன்பிடி தொழிலை விடவைத்து முதல் மூன்று திட்டத்தில் அந்த மக்கள் செய்ய போகிற வேலையைத்தான் இவர்கள் development என்று சொல்கிறார்கள். இது நமது பிரச்சனை இல்லை மீனவர்கள் பிரச்சனை என்று பார்த்தால் அது நமது முட்டாள் தனம்.

இவர்கள் ஏற்றுமதிப் செய்யப்போவது பெட்ரோல், மீத்தேன் வாயு, நிலக்கரி மற்றும் கருங்கற்கள். உலகிலேயே தமிழகத்தில் மட்டும்தான் கருங்கற்கள் அதிகம். அதை நொறுக்கி பொடியாக்கி ஏற்றுமதி செய்யபோகிறார்கள். இப்போது புரிகிறதா, ஏன் நியூட்ரினோஆய்வு என்று!

சுற்றுச்சூழல் ஆய்வு அனுமதி அடிப்படையில் இந்த சாகர் மாலா தொடங்கவில்லை. மாறாக சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜாவேத் ‘‘சுற்றுச்சூழல் அனுமதியை முன்வைத்து தொழில் வளர்ச்சிக்கு தடை விதிக்காது அரசு என்கிறார், தன் துறைக்கு எதிராகவே வாக்குறுதி கொடுக்கிறார் என்பது வேதனைக்குரியது. இதன் விளைவு தொடர் போக்குவரத்து காரணமாக மீன், நீர் வாழ் உயிரினங்கள் மற்றும் தாவர இனங்கள் அழியும் அபாயம் ஏற்படும்.

சாகர் மாலா திட்டத்தின் பாதிப்புகள் குறித்து வேறு எங்கும் தேட வேண்டாம். மத்திய அரசின் கப்பல் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள சாகர்மாலா குறித்த தேசிய கண்ணோட்டம் திட்ட ஆவணத்தில் (Sagarmala / National perspective plan, Apr 2016) அவர்களே கூறுகின்றனர்.

சாகர் மாலா திட்டத்தை அரசு ரகசியமாகவே அமல்படுத்தி கொண்டிருக்கிறது உதாரணமாக தனுஷ்கோடி மக்கள் வாழத்தகுதி அற்ற இடம் என்று தமிழக அரசு அறிவிக்கிறது. 700க்கும் மேற்பட்ட வீடுகள், பள்ளிகூடங்கள், கோவில்கள், வாக்குச்சாவடிகள் இவை அனைத்தும் இருக்ககூடிய இடத்தை திடீரென்று வாழத்தகுதி இல்லை என்று 30 கிராமங்களை அப்புறப்படுத்திவிட்டார்கள்.

தமிழக கடலோரப் பகுதியை அபாயகரமான பகுதி ஆக்க முயற்சி நடக்கிறது. சமீபத்தில் ஓகி புயலை முன் அறிவிப்பு செய்யாததற்க்குக் காரணமும் அதே தான். இதுவரை தமிழகத்தில் மையம் கொண்ட புயல்கள் அனைத்தும் முன்னதாகவே அறிவிக்கப்பட்டு பெயர் வைக்கப்பட்டுத் தான் வீசி இருக்கிறது. ஓகி புயல் தான் விதிவிலக்கு.

தமிழகத்தில் ஆயிரம் மீனவ கிராமங்கள் இருக்கிறது இத்திட்டத்தினால் அந்த மக்கள் தன் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்படும் அவலம் ஏற்படும். இத்திட்டத்தால் உடனடியாக மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள். அதை தொடர்ந்து நாமும்.

தமிழர்களுக்காக இருக்ககூடிய இடம் தமிழ்நாடு மட்டும்தான். நாம் மூன்று எல்லைப்பகுதியை இழந்துவிட்டோம் நான்காவதாக இருக்ககூடிய கடற்பகுதியை மத்திய அரசிடம் கொடுப்பது நாமே நம்மை கூண்டுக்குள் அடைப்பதற்கு சமம். நம் கடற்பகுதியை இவர்கள் நவீன மயமாக்கும் போது நமது பொன்னான கடலோர வரலாற்று பதிவுகள் அனைத்தும் அழிக்கப்படும்.

இத்திட்டத்தை கொண்டு வந்தது பா.ஜ.க, நடைமுறைபடுத்தியது காங்கிரஸ். மீண்டும் பாரதிய சனதா கட்சி (BJP) செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது. காசும் கார்ப்பரேட்டும் எல்லா கட்சிகளுக்கும் ஒன்றுதான்.

சாகர் மாலா திட்டம் இதற்கு பிறகு ஒரு அடி கூட நகர விடாமல் நாம் கரம்கோர்த்து தடுக்க வேண்டும். சாகர் மாலா என்பது தாய் திட்டம். இதன் கிளைத்திட்டம் தான் ஹைட்ரோ கார்பன், மீத்தேன், கூடங்குளம் அணு மின்நிலையம் மற்றும் நியூட்ரினோ. இத்திட்டத்தை தடுக்காமல் விட்டுவிட்டால் பிறகு வருத்தப்படுவதற்கு கூட நாம் இருக்கமாட்டோம், இணைந்து போராடுவோம்.

அனைவரும் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்வோம். மாநில உரிமைகளை மீட்போம்.

**- வசந்தன்**
மன்னார்குடி

# ஹார்வர்டு தமிழ் இருக்கை



அர்விந்த் தனபால்

தலைப்பை விவரிக்கும் முன், தமிழுடைய வருங்காலம் பற்றி சில வரிகள்.

வீரத்தமிழரின் வரலாற்றைப் பேசும் பலருக்கு மத்தியில், தமிழின் வருங்காலத்தைச் சிந்தித்த சிலரது முயற்சி.

உலகில் உள்ள 7000 மொழிகளுள், உலக அறிஞர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொன்மையான மொழிகள் (Classical languages) ஏழு மட்டுமே. இதில் இலத்தின், பாரசீக, சீன மொழிகளுக்கு மேல் தமிழ் அசைக்க முடியாத இடம்பெற்றுள்ளது. காரணம், செம்மொழியின் பழமையும் இலக்கியமும், அவற்றின் காவியங்களுமே.

ஆண்டாண்டு காலமாக நம் முன்னோர்களால் பேசப்பட்டு வந்த தமிழை, இன்று நாம் முயன்றாலும் ஆங்காங்கே ஆங்கிலம் வந்துவிடுகிறது. அதில் நமது தவறேதும் இல்லையென்றாலும் தமிழை முறையாக பயில நினைப்பவர்களுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பது நமது கடமையாக, நான் பார்க்கிறேன்.

அதற்கு வழிவகுக்கும் வகையில், உலக புகழ்பெற்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் நிரந்தரமாக ஒரு தமிழ் இருக்கை அமைக்க, நிதி திரட்டும் பணியில் மேரிலாண்ட் (அமெரிக்கா) மாகாணத்தில் அமெரிக்கவாழ் தமிழர்களால் பதிவு செய்யப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற அமைப்பு ஈடுபட்டுள்ளது.

அப்படியொன்று அமைந்தால், மக்கிக்கொண்டிருக்கும் பல ஓலைச்சுவடிகளும், புத்தகங்களும், காவியங்களும் கணினி மயம் (digitalize) ஆக்கப்படும். தமிழ் இலக்கிய ஆராய்ச்சிகளால் மண்ணுக்குள் புதைந்த பெருமை வெளிப்படும். அவ்வாறான ஆராய்ச்சிகளுக்காக மத்திய அரசின் உதவி, தேவைப்படாது.

மொத்தம் 40 கோடி ரூபாய்கள் நிதி தேவைப்படும் நிலையில், பெரிய கைகளிடமும், கோட்-சூட் போடுபவர்களிடமிருந்தும் ஏற்கனவே 25 கோடி வரை நன்கொடை பெற்றுள்ளனர். 760 கோடி உலக மக்கள் தொகையில், தமிழை தாய் மொழியாய் கொண்டவர்கள் மட்டும் சுமார் 7 கோடிக்கும் மேல். மீதமுள்ள 15 கோடிக்கு பொறுப்பு இவர்கள் தான்.

சமீபத்தில் குறைந்தபட்ச நன்கொடை தொகையை 100ல் இருந்து 1ஆக மாற்றம் செய்யபட்டது நம் வசதிக்காக. ஆகவே நான் கேட்பது 65 ருபாய், அதாவது ஒரு

டாலர். பிறகு அவரவரின் தமிழ் பற்றுக்கு ஏற்றார் போல், டாலரை அதிகப்படுத்தலாம்.

நன்கோடை அளிக்க, http://harvardtamilchair.org/ என்ற இணையத்தளத்திற்கு செல்லவும். சந்தேகங்களுக்கு எனது கைபேசி : +91 99 44 359151 ஐ தொடர்புக் கொள்ளவும்.

இந்த அமைப்பை தொடங்கிய பிரதான நன்கொடையாளர்களான டாக்டர். விஜய் ஜானகிராமன் மற்றும் டாக்டர். சுந்தரேஷன் சம்பத் ஆகியோருக்கு எமது மனமார்ந்த வாழ்த்துகள்.

‘‘தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா... தமிழன்டா!!‘‘

– அர்விந்த் தனபால்,
இளம் பொறியாளர், (கம்மின்ஸ் பவரிக்கா)



# உணவு!



பிரசன்னா
முப்பாட்டன் தேநீர் கடை
மன்னார்குடி

நாம் அனைவரும் உழைப்பதே உணவிற்காகத்தான். அந்த உணவை நம் உடலுக்கு கேடு தரும் விதமாக மாற்றுவது நாமே !!!! ஆம்... நாம் இப்போது இணைய ஊடகங்களில் நிறைய படிக்கிறோம்.

ஆயில் (எண்ணெய்) கெடுதல், மைதா கெடுதல், வெள்ளை சக்கரை (சீனி) கெடுதல் இன்னும் பல நாம் சொல்லி கொண்டே செல்லலாம். ஆனால் நாம் சமைக்கும் உணவு நல்லதா என்று எப்போதாவது பார்த்துள்ளோமா? என்று கேட்டால் இல்லை என்றே நம் பலரிடம் இருந்து பதில் வரும்.

நம் முன்னோர்கள் கற்று தந்த உணவே மருந்து என்பது எத்தனை பேருக்கு தெரியும்? நாம் வேலைக்குச் செல்லும் அவசரத்தில் எதை எதையோ... எப்படி எப்படியோ சமைக்கிறோம். ஆனால் பெரும்பாலான உணவு நம் உடலுக்கு கெடுதலே. நாம் சமைக்கும் முறையும் அதனால் வரும் நோய்களும் இதோ சில....

1. குக்கரில் வேக வைத்த உணவுகளால் செரிமானமின்மை நோய் வரும், வேகும் உணவின் ஆவி வெளியே செல்ல வேண்டும்.

2. எண்ணெய் எதுவாக இருந்தாலும் புகைய கூடாது, அனைத்தும் விசமாக மாறும்.

3. அரிசி, பருப்பு இவைகளை ஒரு நிமிடம் ஊற வைத்து ஒரு முறை கழுவினாலே போதும், மறுமுறை கழுவும் நீரை ரசமாக வைக்கலாம்.
(குறிப்பு: கழனி ரசம், பருப்பு தண்ணி ரசம் மற்றும் அதிகமாக கழுவும் போது நல்ல சத்துகள் வெளியேறும்)

4. தண்டுகள்
இப்போது பெரும்பாலான பெண்கள் கீரை, முள்ளங்கி, பீட்ருட் இதில் உள்ள தண்டுகளை வீணாக்கி விடுகின்றனர். ஆனால் இதில் தான் சத்துகள் உள்ளன.

முள்ளங்கியின் தலையில் பச்சையாக இருக்கும் தண்டை எடுத்து எறியாமல் அதை தண்ணீர், உப்பு, மிளகு, சீரகம் சேர்த்து வேகவைத்தால் முள்ளங்கி ரசம் (Soup) தயார்.

வாரம் ஒரு முறை குடிப்பதால் மூட்டு வலிகள் வரவே வராது.

# கலியுகத் தலைவனைத் தேடி

தலைவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும்?
தன் பிள்ளைகளின் வலி உணராதவன் தகப்பனாக இருக்க முடியாது, அதே போல் தன் மக்களின் வலி உணராதவன் நல்ல தலைவனாக இருக்க முடியாது. இதில் நாம் சற்றே சறுக்கல்களை சந்தித்துள்ளோம் என்பதே நிதர்சனமான உண்மை.

எது சாதனை?
நம்மில் பல நபர்களுக்கு இதில் சந்தேகமே. சாலை அமைப்பது, பாலம் கட்டுவது இது எல்லாம் அரசின் அடிப்படை கடமை என்பது ஓர் அரசிற்கே விளங்கியதா என்றால் சந்தேகமே! பின்னர் மக்களை குறைச் சொல்லிப் பயனேதுமில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் பல தரப்பட்ட போராட்டங்களுக்கு நடுவில் எஞ்சியுள்ள மொழி, பண்பாடு, கலாச்சாரம் இவற்றின் துணையுடன் மக்களின் வாழ்வாதார உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

இதற்கிடையில் 500 கோடி திட்டம், 1000கோடி திட்டம் என கூறி நம்மைப் பிரம்மிப்படைய செய்கின்றனர். சற்று யோசித்தால் அரசாங்கத்தால் விநியோகிக்கும் சில அரசாங்க அட்டையை வாங்க தனியார் அலுவலகங்களில் மக்கள் படும்பாடு, 100 முதல் 1000 வரை அதில் விரயமாகும்.

இவ்வளவு பெரிய நாட்டில் ஒரு அரசாங்கம் அரசாங்க அட்டையை இலவசமாக தரமாக தர ஓர் திட்டம் இல்லை என்பதில் சற்று வருத்தமே. இதை நம் மக்களும் அறிய மறுப்பதும் வருத்தமே. இப்படி இருக்க அறிவிக்கும் 500, 1000 கோடி போன்ற திட்டத்தை எப்படி நடைமுறைப்படுத்தும் என்பதில் சந்தேகமே.

ஆளுமை என்பது எதிர் அரசியலை கடுமையாக எதிர்ப்பது மட்டுமே இல்லை. அடிப்படையே தவறாக இருக்கும் பட்சத்தில் ஆளுமையை மட்டும் வைத்துக் கொண்டு என்ன பயன்? அது சுயநல ஆட்சிக்கே வித்திடும் . அரசாங்கத்தை விமர்சிப்பது வேறு, அரசியல் கட்சிகளை விமர்சிப்பது வேறு. இந்த வேறுபாடை உணர மறுப்பது ஏனோ!

தேடு, உனக்கான தலைவனைத் தேடு, உன் உணர்வு புரிந்த தலைவனைத் தேடு, சாதி மதத்தை மறுத்துத் தேடு, பணத்தை மறந்துத் தேடு, தேடித் தேடி காலங்கள் கழிந்தது. அடுத்த தலைமுறையையாவது தேட விடு.

**- சிவராமகிருஷ்ணன்**
மன்னார்குடி

# என்னவளே....

விடிந்து விட்டது...
இருளைத் தொலைத்து வெளிச்சத்தை
விலாசமாகக் கொண்ட விரிந்த வானம்

சிம்பொனி ராகத்தை மிஞ்சிய
சேவலின் இசைக்கச்சேரியோடு
தொடங்கியது அன்றைய நாள்...

செம்மறி ஆட்டின் கம்பளிப்
போர்வையோடு
நடந்த சண்டையில் இறுதியாக
அவளே தோற்றாள்...

மார்கழியின் அதிகாலைப்பனியில்
உடலை நனைத்துவிட்டு
வாசலை வண்ணமயமாக்கியது
அவளது பிஞ்சு விரல்கள்...

யதார்த்தமான ஒப்பனையோடு
யசோதையின் மகனைக்
காண ஆவலோடு
ஆலயம் நோக்கிப் புறப்பட்டாள்
அந்த மடந்தை...

மனமுருக மாயவனை தரிசித்து விட்டு
வந்தவளின் நெற்றியை
அலங்கரித்தது
கோவிலின் குங்குமம்...

என் கரம் பற்றக்கூடிய அவளின்
விரல்களோடு
விளையாடிக்கொண்டிருந்தன
முல்லைப்பூவும் அப்பூவோடுப்
பிணைந்திருந்த நாரும்

என்னுள்ளே எழுந்த அத்தனைக்
காதலையும் உரைத்தேன்
என்னவளிடம்...

என்னை உன்னவனாக்கிக்
கொள்வாயா? என்று

மறுகணமே உதிர்த்தாள்
அவள் விழியின் வழியே
என்மீதான ஒட்டுமொத்த
காதலை...

கலையாத கனவோடும்
கரையாத காதலோடும
கண்களின் ஒரம் இன்றும்
உணர்கிறேன்
அன்றைய நாளின் காதல்
நினைவுகளை
எனது இதயங்களில்...!!

க.உதயநிதி
மன்னை இராஜகோபாலசுவாமி
அரசினர் கலைக்கல்லூரி.



பா.தமிழரசி,
இளங்கலை தமிழ்
அ.வீரைய வாண்டையார் ஸ்ரீ புஷ்பம் கல்லுரி
பூண்டி

# வாழ்வு

தினமும் கிழிக்கப்படும்
நாள்காட்டி

மீண்டும் உயிர் பெருகின்றன
வருடம் தொடக்கத்தில்

கற்றுக் கொள்ளுங்கள்
விழுந்த பின்தான்

மீண்டும் எழுதல் (புதிய ஆண்டு)

வாழ்வும் அவ்வாறே ...
வாழ்வு முயற்சியும்

விழுவது  தவறல்ல
விழுந்து
கிடப்பது தான் தவறு ....

தமிழ்...
மொழியாக(வும்) மட்டும் பேசிய
தமிழை
இனி மூச்சாக சுவாசிக்கப்
போகிறேன்.

# குப்பை தொட்டி குழந்தை

10 மாதம் கருவில் சுமந்து
மண்ணில் நட்டு பூக்க வைப்பாய்!!!
என்று எண்ணினேன்

10 நிமிடத்தில்
குப்பை தொட்டியை
தாய் மடியாய் மாற்றுவாய்
என்று அறியாமல்!!!

# குலோத்துங்க சோழ விண்ணகரம் என்கிற மன்னார்குடி தொகுப்பு - 2



மன்னை ராம்

வரலாறு என்பது இன்றைய அறிவியல் சமுதாயத்திற்கு தேவையான ஒன்று. எப்படி வாழ்ந்தோம் என்பதை தெரிந்து கொண்டால் எப்படி வாழ வேண்டும் என்பது தெரிய வரும். எனவே ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு ஊரின் வரலாற்றை அறிவது முக்கியம்.

‘‘ஊரும் பெயரும் உடைத்தொழில் கருவியும்
யாருஞ் சார்த்தி அவையவை பெறுமே’’

என்ற மரபியல் நூற்பாவில் யாவர்க்கும் உரியன எவையென்று கூறுமிடத்து ஊர். இயற்பெயர், சிறப்பு பெயர், தத்தம் தொழிலுக்கேற்ற கருவி ஆகியன எல்லாரையும் சார்ந்தே வரப்பெறும் என்று கூறுகிறார் தொல்காப்பியர்.

மன்னார்குடி பற்றி எழுதும் போது வித்தியாசமாக உணர்கிறேன். அது, எது போல் என்றால் சந்திரனின் குளுமையான கிரகணங்கள் முழுவதும் பரவிய இரவில் அடிக்கும் குளிர்ந்த காற்றும், சந்திரனின் ஒளியினுடைய குளுமையும் ஒன்று சேர்ந்து மெல்ல நடுங்க வைத்து, கண்ணுக்கு இதமாக, உடம்புக்கு இதமாக, மூளைக்கு இதமாக எல்லா விஷயங்களும் கண்ணுக்குள் புகாமல் சில ஒளிகள் மட்டுமே கண்ணுக்குள் புகுந்து கொண்டிருக்கிற ஒரு உணர்வு.

இப்படி தான் சொல்ல வேண்டும். வேறு வழியில்லை. அந்த உணர்வை வார்த்தையில் பகிர்ந்துக் கொள்ள தெரியவில்லை, அதனால் அதுபோல இதுபோல என்று விதம் விதமாக சொல்கிறேன்.

இது நிற்க.

மன்னார்குடிக்கு ‘‘செண்பகாராண்யம்’’ என்ற பெயரும் உண்டு. ஆரண்யம் என்ற வட சொல் காடு என்பதை குறிப்பதாகும். நறுமணமிகுந்த செண்பக மரங்கள் நிறைந்த காடாக இந்த ஊர் இருந்து உள்ளது. பின்னர் காடுகளை அழித்து நிலந்திருத்தி நாடாக்கி உள்ளார்கள்.

செண்பகமலரை வண்டுகள் நெருங்காது, ஆகையால் இவ்வூரை ‘‘வண்டுவராபதி என்றும் அழைப்பார்கள்.

நறுமணமிக்க செண்பகாரண்ய ஊரில் சோழ மன்னர்களும், நாயக்க மன்னர்களும் வசித்து வந்துள்ளார்கள். சோழர்கள் இங்கு தங்கியிருந்தற்கு தஞ்சாவூர் அரண்மனையில் இருக்கும் சுரங்கங்களை ஆதாரமாகக் கொள்ளலாம்.

ராசாதி ராசன் மன்னரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர் ராஜேந்திரன் என்ற முதலாம் குலோத்துங்கன், இவர் முதலாம் ராஜேந்திரனின் பேரன் ஆவார். இவரது ஆட்சிகாலாம் கி.பி. 1070 - 1120 ஆகும்.

கங்கை கொண்ட சோழபுரத்தை தலைநகரமாகக் கொண்டு ஆண்டாலும் தொண்டை மண்டலத்தின் பெரும்பகுதி இவருடைய நேரடி பார்வையின் கீழ் இருந்தது.

கி.பி 1113 - ல் ராசாதிராசன் மன்னரால் செங்கல்லால் கட்டபட்ட ராசகோபாலசாமி கோயிலை கருங்கற்கள் கொண்டு திருப்பணி செய்து தன் பெயருடன் சேர்த்து ''குலோத்துங்க சோழ விண்ணகரம்'' என பெயரிட்டார். கோவிலின் பெயரிலே ஊரும் அழைக்கப்பட்டது.

கி.பி. 9 ஆம் நூற்றாண்டின் இடைப்பபகுதியில் சோழப் பேரரசு தோன்றி படிப்படியாக தமிழகம் மட்டுமில்லாது வெளியிலும் பரவியது. புதியதாக தோன்றிய ஊர்களுக்கு அரசர்களின் பட்டங்களும், அரசு குடும்பத்தின் பெயர்களையும் நாட்டு பிரிவின் பெயராக வைத்தார்கள்.

இயற்கை அமைப்பை ஒட்டிய பல பிரிவுகளைக் கோட்டம், வளநாடு, கூற்றம், சதுர்வேதி மங்கலம் என்பனவும், வணிகர்கள் இருந்த பகுதி நகரங்கள் எனப்பட்டன. இவை பல கிராமங்களை தன்னுள் அடங்கிய பகுதிகளாக விளங்கின.

அரசர் பெயர் இல்லா ஒரு கல்வெட்டில்

''உய்யகொண்டார் வளநாட்டு கருவில நாட்டு குலோத்துங்க சோழ நல்லூர்''

''சுத்தவல்லி வளநாட்டு தனியூர் இராசாயிராஜச் சது வெதங்கல்''

''இராசேந்திர சோழ வளநாட்டு புரங்கரம்பை நாட்டு.............''

என்று மூன்று வளநாடும் இடம் பெறுகின்றன.

மன்னார்குடியில் காணப்படுகின்ற எந்த கல்வெட்டிலும் மன்னார்குடி என்ற பெயர் இடம் பெறவில்லை. கல்வெட்டில் காணப்படும் பாம்புணிக் கூற்றம் என்பது இன்று பாமணி என்ற ஊராக இருக்கிறது. அதே போல் சுத்தமல்லி வளநாடு என்பது

சித்தமல்லி என்ற பெயரில் மன்னைக்கு அருகில் உள்ளது.

இப்படி இந்த ஊர் பெயர்கள் இன்றளவும் இருக்க நமது ஊர் பெயர்கள் இராசாதி ராச சதுர்வேதி மங்கலம், குலோத்துங்க சோழ விண்ணகரம் என்றிருந்த பெயர்கள் ஏன் அழிவுற்றது என காரணம் தெரியவில்லை.

ஒரு கல்வெட்டில் ''மன்னார் கோயில்'' என்ற பெயர் மட்டும் உள்ளது.
வரலாறு தொடரும்...

– மன்னை ராம்



# தன்னம்பிக்கையும், அன்பும் தான் வெற்றி தரும்



S. அபிநயா

எவர் ஒருவர் இந்த வாழ்க்கையை ஒரு உயர்ந்த தன்மையை அடைவதற்குரிய ஒரு படியாக பார்க்கிறாரோ, அவருக்கு தோல்வியே கிடையாது. வாழ்வின் சின்ன சின்ன விடயங்களையே தன் இலட்சியமாக கொண்டவருக்குத் தான் வெற்றியும் தோல்வியும். இந்த வாழ்க்கையை ஒரு உயர்ந்த தன்மையை அடைவதற்குரிய ஒரு படியாக பார்ப்பவர் வெற்றி கிடைத்தால் அதை தன் நன்மையாக தான் நினைப்பார், தோல்வி கிடைத்தால் அதையும் தனது நன்மையாக தான் நினைப்பார்.

பொருளாதாரம் நல்ல நிலைமையில் இருந்த போது, முட்டாள்கள் கூட வாழ்க்கையை வெற்றிகரமாக மாற்றினர். ஆனால் இடையே பொருளாதாரம் சிறிது வீழ்ச்சி கண்டபோது தொழிலில் நிலைத்திருக்கவும், வெற்றி பெறவும் புதிய திறமை தேவைப்பட்டது.

மக்கள் தோல்வி குறித்து பயப்படுகிறார்கள். தோல்வி என்பதே துயரம் தான். அதில் பயம் என்ற ஒன்றை வேறு ஏன் இணைக்கிறீர்கள்? வெற்றி என்பது எல்லோருடைய விருப்பம் தான். ஆனால் வெறும் விருப்பத்தினால் மட்டும் வெற்றி வருவதில்லை. திறமை இருந்தால் மட்டுமே வெற்றி கிடைக்கும்.


அன்பு, ஆனந்தம், அமைதி எல்லாமே மிகவும் சுயநலம் தான். ஆனால் இந்த சுயநலத்தில் கஞ்சத்தனம் வேண்டாம். இதற்கென்று பணமா செலவாகிறது? எனவே அனைவரின் மீதும் அன்பாக இருக்கலாம்.




நீலாவதி அவர்கள்
கை வண்ணத்தில்

மன்னை
மார்கழி





நிவேதா ராசசேகரன்



வேம்பரசி

மன்னை மார்கழி



இரமா (இல்லத்தரசி)



அனுசுயா (இல்லத்தரசி)

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!!
தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322** http://maintharkal.mannai.in